## சமூர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2025

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சமூர்த்தி சமூக அபிவிருத்தி நம்க்பிகைப் பொறுப்பு நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களானது நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தினை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகள் என்பவற்றை வெளிப்படுத்துதல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும்

நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது` நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது 03 மாவட்டங்களுக்கு நிவாரணங்களை புதிதாக வழங்குதல்களாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,264,282 முற்பணம் தீர்த்துவைக்கப்படாதிருந்ததுடன் அப்பணம் நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தீர்த்துவைக்கப்படாத முற்பணங்களாக தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா 1,000,000 பணம் மற்றும் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்தலாக குறிப்பிடப்பட்ட ரூபா 264,282 பணம் இவ்வாறு தீர்த்துவைக்கப்படாத முற்பணமாக 2025 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணத்தில் ரூபா 01 மில்லியன் பணம் மன்னார் மாவட்டத்தினால் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக வழங்கிய பணம் ஆனதுடன் அப்பணமும் 2019 புதிய சமூர்த்தி நிவாரண உரிமைப்பத்திரங்களை பகிர்ந்தளிக்கும் நட்வடிக்கைக்காக செலவு செய்யப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால் 2026 மே 12 ஆந் திகதி | முற்பணங்களை ஆண்டின் போது தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இவ்வாறு நீண்டகாலமாக நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டுதலினை சரிசெய்வதற்கு மற்றும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிலைமை ஏற்படாதிருப்பதற்குமான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். |

நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் அப்பணம் 2019 புதிய சமூர்த்தி நிவாரண உரிமைப்பத்திரங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைக்காக செலவு செய்யப்பட்ட ஒரு பணமாக கருதி கணக்கீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 240,377,744 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 748,179,534 மிகையாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 507,801,790 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது முதலீட்டு வட்டி வருமானம் குறைவடைதல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 யூலை 11 ஆந் திகதிய 16/1316/711/023/-1 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்று சேவா லங்கா மன்றத்திற்குச் சொந்தமான கோபாலபுரம் - நிலாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள 07 ஏக்கர் 37 பேச்சர்ஸ் காணி மற்றும் அதில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையம் ரூபா 126 மில்லியன் பெறுமதிக்கு நிதியத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. திவினெகும நலன்பெறுனர்கள், சிரேஷ்ட பிரசைகள், ஊனமுற்ற நபர்கள், தனி பெற்றோர் குடும்பம் ஆகியோருக்கான வருமானம் மற்றும் வாழ்க்கை மட்டத்தை அதிகரிப்பதனை குறிக்கோளாகக் கொண்டு பயிற்சி நிகழ்சித்திட்டங்களை நடாத்துவதற்காக இந்த நிலையம் பேணப்பட்டு வந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 05 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | தற்பொழுது கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அதேபோல தனியார் நிறுவனங்களுக்கு பயிற்சி தொடரினையும் கருத்தரங்குகளையும் நடாத்துவதற்காக நிவாரண விலைகளின் கீழ் தேவையான வசதிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே இப்பயிற்சி நிலையத்தை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தின் போது அறை வசதிகள் காணப்பட்டதுடன் அவற்றினை புதுப்பித்து தங்குமிட வசதிகளை வழங்கி பயிற்சி நிலையத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரதேசமானது பிரசித்திபெற்ற சுற்றுலா கவர்ச்சிகரமான பிரதேசம் என்பதனால் தங்குமிட வசதிகளுக்கான வேண்டுதல்களும் காணப்பட்டது. | நிலையத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களை உச்ச அளவு வினைத்திறனாக பயன்படுத்தி நிதியத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு போதியளவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கும் நிலையத்தின் வருமானங்களுக்கும் செலவுகளுக்குமிடையே நிலையான நிதி சமன்பாடு உருவாகும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் கடந்த 03 ஆண்டுகளின் வருமானம் மற்றும் செலவுகளை கவனித்துப் பார்க்கும் போது நிலையத்தை செயற்படுத்துவதற்காக நிதியத்தின் பணத்திலிருந்து குறிப்பிடத்தக்க அளவான பணத்தை செலவு செய்ய வேண்டியிருந்ததன் காரணமாக அந்த நிலையத்தை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளும் நிதியத்தின் குறிக்கோளும் எதிர்வார்த்தவாறு வினைத்திறனாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நிலாவெளி பயிற்சி நிலையத்தின் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 7,683,746 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் நிலையத்திற்கு கிடைக்க வேண்டிய அனைத்து வருமானங்களையும் முழுமையாக அடையாளங்கண்டு முறைப்படியாக அறிக்கையிடுதல் மற்றும் கணக்கீடு செயதலினை உறுதிப்படுத்தும் வகையில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாடும் கண்காணிப்பும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலாவெளி பயிற்சி நிலையத்திற்கு கிடைத்த அனைத்து பணத்திற்காக பொது 172 பற்றுச்சீட்டினை வழங்குமாறு கணக்குகளை பதிவு செய்வது தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இன்னும் முறைமைப்படுத்துவதற்காக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிலையத்திற்கு கிடைக்கும் அனைத்து வருமானங்களும் முறைப்படியாக அறிக்கையிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டினையும் கண்காணிப்பு நடைமுறையினையும் ஸ்தாபித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும் |
| (இ) | 2023 மே 22 ஆந் திகதி நிலாவெளி பயிற்சி நிலையத்தில் 05 அறைகளைப் புதுப்பிக்கும் உடன்படிக்கையின் கீழ் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 488,058 பணத்தை மீளச்செலுத்தும் போது நிதிப்பிரமாணம் 237 இன் 1 ஏ(iii) ஆம் பட்டோலையின் பிரகாரம் இறுதிச் சான்றிதழ்களுக்குத் தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிலாவெளி பயிற்சி நிலையத்தில் 05 அறைகளைப் புதுப்பிப்பது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் வழங்கிய சிபாரிசுக்கு இணங்க கோவை குறிப்புக்களின் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுத்திவைத்தல் பணத்தை விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நி.பி 237 இன் பட்டோலை 1 ஏ(iii) இன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் தவறுதலாக தவிர்க்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் மற்றும் உரிய உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தேவையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நிதியத்தின் கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களை முறைப்படியாக பராமரித்து அவற்றின் பயன்படுத்தக்கூடிய நிலைமையை பேணுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் 2023 ஆம் ஆண்டின் பின்னர் நிலையத்தின் புதுப்பித்தல் மற்றும் பாராமரிப்பு நடவடிக்கை போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்காமையின் காரணமாக கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2025 செப்தெம்பர் 04 ஆந் திகதிய அமைப/25/1531/804/179 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் VIII ஆம் பகுதியின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட நியதிச்சட்டமற்ற நிதியம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட நிதிய மீளாய்வு குழுவின் 2025 யூலை 02 ஆந் திகதிய அறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த நிதியம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு நிதியமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த ஆலோசனைக்கிணங்க நிதியத்தின் எதிர்கால இருத்தல் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் அது தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளும் இவ்வறிக்கைத் திகதி வரை முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபரிடம் விசாரித்து உரிய தீர்மானம் கிடைத்துள்ளதுடன் இது தொடர்பாக அரசாங்க நிதி திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்தின் இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டவாறு நியமிக்கப்பட்ட விசேட குழுவின் மூலம் இந்த நிதியம் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை முடிவடைந்துள்ளதனால் சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் உரிய சட்டரீதியான தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு இந்நிதியம் சம்பந்தமாக எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளை துரிதமாக முடிவு செய்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு தொடர்பாக தனி நபர்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவினால் 2025 யூன் 25 ஆந் திகதிய 2025/08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2,253 செயற்திட்டங்களுக்காக 2025 நவம்பர் 11 மற்றும் திசெம்பர் 09 ஆகிய திகதிகளின் போது முறையே ரூபா 129,859,717 மற்றும் ரூபா 37,614,969 ஆக மொத்தமாக ரூபா 167,474,686 தொகை 20 மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 136,312,386 தொகை 1,909 செயற்திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்டிருந்தும் சுற்றறிக்கையினை வழங்குதலும் நிதியத்தினை விடுவித்தலும் ஆண்டின் இறுதி அரைப் பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் நிகழ்சித்திட்டங்களை எதிர்பார்த்தவாறு அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தனி நபரினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2025 நவம்பர் 11 மற்றும் 2025 திசெம்பர் 09 ஆகிய திகதிகளில் 2,244 செயற்திட்டங்களுக்கு முறையே ரூபா 129,859,717 மற்றும் ரூபா 37,614,969 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்சித்திட்டத்திற்காக பணத்தை வழங்குதல் இடம்பெற்ற சமயத்தில் திட்வா சூறாவளி நிலைமையானது சில மாவட்டங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தியிருந்ததுடன் ஏனைய மாவட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்டு மிகுதிப் பணம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டின் போது 1909 தனி நபர் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 136,312,386 வழங்கப்பட்டுள்ளது. | மேம்படுத்தும் நிகழ்சித்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அமுல்ப்படுத்தும் வகையில் தேவையான திட்டங்களையும் நிருவாக நடவடிக்கைகளையும் ஆரம்பத்திலேயே மேற்கொண்டு நலன்பெறுனர்களுக்கு உரிய பிரதி பலன்களை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை மாவட்ட செயலகத்தில் சமூக மேம்பாட்டு நிகழ்சித்திட்டங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவு கணக்காய்வு பரீட்சிப்பிற்கு இணங்க 2025 யூன் 25 ஆந் திகதிய 2025/08 ஆம் இலக்க சமுர்த்தி சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக பாதுகாப்பு நிதியை பெற்றுக்கொள்வதற்காக சமுர்த்தி அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 150 செயற்திட்டங்களில் 107 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி ஏற்பாடு ரூபா 3,629,641 ஆன 43 செயற்திட்டங்கள் 10 பிரதேச செயலகங்களினால் அமுல்ப்படுத்தப்படாமையின் காரணமாக உரிய நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் 205 தனி நபர் செயற்திட்டங்களுக்காக ரூபா 15,039,490 வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 162 தனி நபர் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா 11,452,328 செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் மிகுதிப் பணமாக ரூபா 3,782,675 வைப்புச் செய்யப்பட்டுள்ளதுது. | அங்கீகரிக்கப்பட்ட மேம்படுத்தும் செயற்திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அமுல்ப்படுத்தப்படுகின்ற என்பதனை உரிய காலத்தில் கண்காணிப்பினை மேற்கொண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாக பயன்படுத்தி நலன்பெறுனர்களை மேம்படுத்தும் குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 பெப்ரவரி 14 ஆந் திகதிய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2024/04 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க பாரிய அளவிலான காணியுடனான பயிற்சி நிலையங்களில் அக்காணிகள் உச்ச அளவு வருமானம் உழைத்தல் இடம்பெறும் வகையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் அல்லது ஏனைய வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நிலாவெளி சமுர்த்தி பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான காணிகள் சம்பந்தமாக அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க வருமானத்தை உழைப்பதற்காக வினைத்திறனானகவும் முறைப்படியாகவும் ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால பயிர்களாக தென்னை நாற்றுக்கள் செவ்விளநீர் நாற்றுக்கள் மா நாற்றுக்கள், பாக்கு, வாழை நாற்றுக்கள் மற்றும் மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் தற்பொழுது இயற்கை காரணங்களின் அடிப்படையிலும் மிருகங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்ககளின் காரணத்தினாலும் தென்னை மா, பாக்கு நாற்றுக்களில் குறித்த அளவானவை செயற்பாடாகக் காணப்பட்டதுடன் தென்னைக்காக பசளை இடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தெரிவுசெய்யப்பட்ட காணியில் மாதுளைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 2026 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்படுள்ளது. | நிதியத்திற்குச் சொந்தமான காணிகளில் காணப்படும் வளங்கள் மற்றும் திறன்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அவற்றினை உச்ச அளவு வினைத்திறனனுடன் பயன்படுத்தி நிரந்தமாக வருமானத்தை உழைக்க கூடிய ஒரு வேலைத் திட்டத்தினை துரிதமாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2023 யூலை மாதத்திலிருந்து சமுர்த்தி நிவாரண நிகழ்சித்திட்டங்களை நிறுத்தியதன் காரணமாக சமுர்த்தி சமூக பாதுகாப்பு பிரதிபலன் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளதனால் ரூபா 1,010,000 செலவு செய்து அபிவிருத்தி செய்யப்பட்ட நலன்பெறுனர் முகாமைத்துவ மொடியூல் மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அச்சொத்துக்களுக்காக செலவு செய்யப்பட்ட பணத்திற்கு ஒப்பீடாக எதிர்பார்த்த பிரதி பலனை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தற்பொழுது திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு இணங்க மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படுகின்ற அஸ்வெசும நலன்பெறுனர்களை இத்தரவு முறைமைக்கு உள்ளடக்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. திணைக்கள கடமைகளுக்கு இணங்க சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கைகளை செயற்படுத:துவதற்காக நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுகப்கப்பட்டு வருகின்றது. | நலன்பெறுனர் முகாமைத்துவ மொடியூலினை நிகழ்கால செயற்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் துரிதமாக வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் அதனை இன்னும் பாவனைக்கு எடுத்துக் கொள்ள முடியாதிருக்குமாயின் அச்சொத்து சம்பந்தமாக முறையான தீர்மானம் எடுத்து வினைத்திறனான ஏனைய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் நிலாவெளி பயிற்சி நிலையத்திற்காக 08 CCTV கமராக்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 270,000 நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அக்கமராக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 411,000 செலவு செய்யப்பட்டிருந்ததனால் அங்கீகரித்த நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 141,000 செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் கொள்வனவு செய்த 08 கமராக்களில் 03 கமராக்கள் மாத்திரம் தொலைக்காட்சி திரையினூடாக அவதானிக்கக்கூடிய வகையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அனைத்து கமராக்களிலும் அவதானிப்புச் செய்யும் இயலுமையினைப் பெற்றுக்கொள்வதற்காக பின்னர் இன்னும் ரூபா 65,000 செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகைக்கு முன்னர் தேவைப்பாடு சரியாக அடையாளம் காணப்பட்டு பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக பெறுகையின் வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 270,000 ஆன நிதி ஏற்பாடு CCTV கமராக்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தும் முறைப்படியாக விலைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக இந்த நடவடிக்கையை மீளாய்வாண்டு வரை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது திருத்திய பாதீட்டின் மூலம் இந்த நிதி ஏற்பாடு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பிரதான கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் மாத்திரம் தொலைக்காட்சியினூடாக பார்க்கும் இயலுமை உள்ளதுடன் ஏனைய கட்டிடங்களுக்கும் தொலைக்காட்சி திரைகளின் மீது பார்க்ககூடிய வகையில் கமராக்களைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 65,000 மதிப்பீட்டு கிரயம் நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை தேவைப்பாட்டினை முறைப்படியாக அடையாளங்கண்டு திட்டமிடப்பட வேண்டியதுடன் வினைத்திறனான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். உரிய உத்தியோகத்தர்களுக்கு அச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு முறையாக பொறுப்பு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் (i) 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம் அடுத்துவரும் ஆண்டிற்கான பாதீட்டினைத் தயாரித்து நடைமுறை ஆண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்து அதன் பிரதி அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டு தொடர்பாக நிதியத்தின் பாதீட்டினை தயாரிக்கும் போது தாமதம் இடம்பெற்றுள்ளது என தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டின் போது தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பாதீட்டினைத் தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தாமதங்கள் இடம்பெறாத வகையில் கண்காணிப்பு நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |